NATIONAL SENIOR CERTIFICATE EXAMINATION
NOVEMBER 2014

# TAMIL FIRST ADDITIONAL LANGUAGE: PAPER II

Time: 2 hours 70 marks

---

**PLEASE READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY**

1. This question paper consists of 7 pages. Please check that your question paper is complete.
2. There are 3 sections in this question paper. Each section has two questions. Every question has 35 marks. Only TWO questions must be answered from the entire paper. You may **NOT** answer both questions from one section.
3. Read the instructions to each question carefully.
4. Answer all questions, taking note of choices given.
5. Number your answers exactly as the questions are numbered.
6. All answers must be in **TAMIL**.
7. It is in your own interest to write legibly and to present your work neatly.

---

IEB Copyright © 2014 

# பகுதி ஒன்று

1. **கீழ்வரும் பகுதியை நன்றாகப் படித்துப் பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடை எழுதுக.**

மட்டியூர் என்னும் ஊரிலே மாணிக்கசாமி என்னும் பெயருடைய செல்வன் ஒருவன் நாற்பது ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்திருந்தான். அவன் பல வழிகளாலும் பொருளைத் தேடினான். அவனிடம் ஏராளமான பொருள் குவிந்தது. மாணிக்கசாமி அந்தப் பொருள்களை நன்கு பயன்படுத்தவில்லை. எளியவர்களுக்கு ஒன்றும் கொடான். விருந்தினர்களுக்குக் கூட உணவிடான். விருந்தினர்களைக் கண்டால் ஏதேனும் சாக்குப்போக்குச் சொல் அனுப்பி விடுவான்.

புலவர்கள் இவன் பெருஞ்செல்வனாக இருக்கிறானே! ஏதேனும் உதவி செய்வான் என்று சென்றால், 'சோம்பேறிகளாகத் திரியும் உங்களுக்கு ஏன் பொருள் கொடுக்க வேண்டும்' என்று வாய்க்கு வந்தபடி இகழ்ந்துரைப்பான். தானும் தக்கவாறு பொருளைச் செலவிட்டு உண்ண மாட்டான். உண்ண விரும்பும் மனைவி மக்களையும் உண்ண விடமாட்டான். பொருள்கள் எல்லாம் பெட்டிகளில் பூட்டி வைத்தான். அப்பெட்டிகள் மீது தானே இராப்பகல் காவலாக இருந்து கொண்டிருந்தான்.

1.1 **கோடிட்ட இடங்களைச் சரியான சொற்களால் நிரப்புக:**

1.1.1 அவனிடம் ஏராளமான ____________ குவிந்தது. (2)

1.1.2 ஏதேனும் ____________ செய்வான் என்று சென்றால் ... (2)

1.2 **சரியான விடை எழுதுக:**

1.2.1 எவன் மட்டியூர் என்ற ஊரில் வாழ்ந்தான்? (2)

1.2.2 இவன் விருந்தினர்களைக் கண்டால் என்ன செய்வான்? (2)

1.2.3 புலவர்கள் ஏன் அவனைப் பார்க்கச் சென்றார்கள்? (2)

1.2.4 பொருள்கள் எங்கே பூட்டி இருந்தன? (2)

1.3 **உணமை அல்லது உண்மை அல்ல என்று கூறுக:**

1.3.1 மாணிக்கசாமியின் வயது நூறு. (2)

1.3.2 புலவர்களை வாய்க்கு வந்தபடி இகழ்ந்தான். (2)

1.4 **ஒருமைக்குப் பன்மை தருக:**

1.4.1 பொருள் (2)
1.4.2 மரம் (2)

1.5 **எதிர்ச்சொல் தருக:**

1.5.1 சிறிய (2)
1.5.2 இல்லை (2)
1.5.3 துன்பம் (1)

1.6 இக்கதையை 10-12 வரிகளுக்குள் முடிவு செய்க. (10)
**[35]**

**அல்லது/OR**

1.7 இல்லறம் புகுந்த துறவி என்ற கதையைப் பற்றி சுமார் 20-25 வரிகள் எழுதுக.
**[35]**

**35 marks**

# பகுதி இரண்டு

2. கீழ்வரும் வரிகளை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் கேள்விகளுக்குப் பதில் எழுதுக.

## காதலோ காதல்!

கண்டதொரு காட்சி கனவுநன வென்றறியேன்,
எண்ணுதலுஞ் செய்யேன், இருபது பேய் கொண்ட
கண்ணும் முகமும் களியேறிக் காமனார் [வன்போல்
அம்பு நுனிகள் அகத்தே அமிழ்ந்திருக்க,
கொம்புக் குயிலுருவங் கோடிபல கோடியாய்
ஒன்றே யதுவாய் உலகமெலாந் தோற்றமுற
சென்றே மனைபோந்து சித்தந் தனதின்றி,
நாளொன்று போவுதற்கு நான்பட்ட பாடனைத்தும்
தாளம் படுமோ? தறி படுமோ? யார் படுவார்?
நாளொன்று போயினது; நானு மெனதுயிரும்,
நீளச்சிலை கொண்டு நின்றதொரு மன்மதனும்,
மாயக் குயிலுமதன் மாமாயத் தீம்பாட்டும்;
சாயைபோ லிந்திரமா சாலம்போல் வையமுமா
மிஞ்சி நின்றேம்.

2.1 கோடிட்ட இடங்களைச் சரியான சொற்களால் நிரப்புக:

2.1.1 கண்டதொரு ____________ கனவு நன வென்றறியேன். (2)

2.1.2 அம்பு ____________ அகத்தே அமிழ்ந்திருக்க (2)

2.1.3 தறி படுமோ? ____________ பாடுவார்? (2)

2.2 சரியான விடை தருக:

2.2.1 இக்கதையை எழுதியவர் யார்? (2)

2.2.2 மறுபிறப்பில் குரங்கன் யாராகப் பிறந்தான்? (2)

2.2.3 மாடன் யார்? (2)

2.3 உண்மை அல்லது உணமை அல்ல என்று கூறுக:

2.3.1 மறுபிறப்பில் சின்ன குயிலி ஒரு கிளியாகப் பிறந்தாள். (2)

2.3.2 இளவரசன் சின்ன குயிலியைக் காதலித்தான். (2)

2.4 ஒருமைக்குப் பன்மை தருக:

2.4.1 காட்சி (2)

2.4.2 கொம்பு (2)

2.4.3 பறவை (2)

2.4.4 புறா (2)

IEB Copyright © 2014

2.5 எதிர்ச்சொல் தருக:

2.5.1 சில (2)

2.5.2 அந்த (2)

2.5.3 மேல் (2)

2.6 இளவரசனைப் பற்றி 5-6 வரிகள் எழுதுக. (5)

**[35]**

அல்லது/OR

2.7 திருக்குறளைப் பற்றி 25 – 30 வரிகள் எழுதுக.

**[35]**

**35 marks**

# பகுதி மூன்று

3. **கீழ்வரும் பகுதியை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் கேள்விகளுக்குப் பதில் எழுதுக.**

லட்சுமி: அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம். என் சொந்தக்காரங்க வீட்ல ஒரு பெண் இருக்கு. பேசி முடிச்சிடலாங்க.

சௌத்: இவனுக்கு யார் பெண் கொடுப்பாங்க?

லட்சுமி: நீங்க சரியென்று சொல்லுங்க.

சௌத்: சரி லட்சுமி என் மகனுடைய நியாயமான சந்தோஷத்துக்கு நான் குறுக்கே நிற்கமாட்டேன்.

3.1 **முடிவு செய்க:**

3.1.1 இந்த நாடகத்தின் பெயர் ____________ (2)
3.1.2 காவல் அதிகாரியின் பெயர் ____________ (2)
3.1.3 மகனின் பெயர் ____________ (2)

3.2 **சரியான விடை எழுதுக:**

3.2.1 இந்த நாடகத்தின் கருத்து என்ன? (2)
3.2.2 இந்த நாடகத்தில் விமலா யார்? (2)
3.2.3 பல ஆண்டுகளாக ஜெகன் எங்கே இருந்தான்? (2)

3.3 **உண்மை அல்லது உண்மை அல்ல என்று கூறுக:**

3.3.1 காவல் அதிகாரி தன் மகனைச் சுட்டுக் கொன்றார். (2)
3.3.2 கதையின் முடிவுக்குப் பின் லட்சுமி இறந்தாள். (2)

IEB Copyright © 2014

3.4 **பன்மை தருக:**

3.4.1 நினைவு (2)
3.4.2 பெண் (2)
3.4.3 மகன் (2)

3.5 **எதிர்ச்சொல் தருக:**

3.5.1 இல்லை (2)
3.5.2 போனான் (2)

3.6 **ஆண்பாலுக்குப் பெண்பால் எழுதுக:**

3.6.1 மருமகன் (2)
3.6.2 திருடன் (2)

3.7 காவல் அதிகாரியைப் பற்றி 4-5 வரிகள் எழுதுக. (5)
**[35]**

**அல்லது/OR**

3.8 தங்கப் பதக்கம் ஒரு சிறந்த குடும்பக்கதை - இந்த நாடகத்தைப் பற்றி சுமார் 15-20 வரிகள் எழுதுக.
**[35]**

**35 marks**

**Total: 70 marks**

IEB Copyright © 2014